நிலையம் கட்டுகிற ஒரு கருத்துரு ஆய்வுக்கு எடுக்கப்பட்டது என்பதை நான் தெரிவித்திருந்தேன். அந்த ஆய்வின் அடிப்படையிலேதான் அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் பல்வேறு நிலங்களை, இதற்கு சாத்தியக்கூறான இடங்களை எல்லாம் தேர்வு செய்து, பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித் தலைவரே நேரடியாகப் பார்வையிட்ட பிறகுதான், அந்த நிலங்களில் புதிய பஸ் நிலையம் உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்திருக்கிறார். ஆகவே இது ஆய்விற்கு எடுத்த பின்புதான் இந்த முடிவுக்கு பேரூராட்சி நிர்வாகம் வந்திருக்கிறது. மேலும் தற்போதிருக்கிற பழைய பஸ் நிலையம் சுமார் 48 சென்ட் நிலத்திலேதான் இருக்கிறது. குறைந்தது அரை ஏக்கர் நிலத்திலே மட்டும் இருக்கிறது. அந்த அரை ஏக்கர் நிலத்திலே இருக்கிற சிறு சிறு கடைகளை அகற்றினால்கூட, அந்த இடம் போதாது என்ற காரணத்தாலேதான் மாற்று இடம் நிச்சயமாகத் தேவைப் படுகிற சூழ்நிலையில், அந்த மாற்று இடங்களைத் தேர்வு செய்து, ஆய்வு செய்தோம். அந்தச் சூழ்நிலையில் இன்றைக்கு அங்கே இருக்கின்ற கடைகளை அகற்றுகிறபோது, அங்கே இருக்கிற கடை அதிபர்கள், வாடகைதாரர்கள், லீசுக்கு இருக்கிறவர்கள் எல்லாம் வழக்காடு மன்றத்திற்குச் செல்லுகின்ற சூழ்நிலை எல்லாம் இருக்கிறது. ஆகவே திடீரென்று ஒரு முடிவை அரசு எடுக்க முடியாது. அப்படி முடிவெடுத்தாலும் அது ஒரு நிரந்தரத் தீர்வாக அமையப்பெற வேண்டும். நிரந்தரத் தீர்வாக இல்லை என்று சொன்னால் மீண்டும் அந்தப் பிரச்சினை இருந்துக்கொண்டிருக்கும் என்ற காரணத்தாலேதான் தற்போதைக்கு இல்லை என்று சொல்லியிருந்தேன். மாற்று இடத்தை முறையாகத் தேர்வு செய்கிறபோது அங்கே நிச்சயமாகப் புதிய பஸ் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 279, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

279—

குமாரப்பேட்டையில் மகளிர் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்.

***26874**—செல்வி கோ. மல்லிகா:*

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 ஏப்ரல் 7]

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், குமாரப்பேட்டையில் மகளிர் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஒன்றியம் குமாரப்பேட்டையில் மகளிர் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க மீன்துறை உதவி இயக்குநர் (மண்டலம்) கடலூருக்கு விண்ணப்பித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதயதெய்வம் டாகடர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற அடிப்படையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளித்ததற்கு நன்றி. மீனவர் வாழ்வில் ஒளி ஏற்றிட பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்துள்ள நிலையில் குமாரப்பேட்டையில் மகளிர் கூட்டுறவு சங்கம் அமைக்க முறைப்படி உதவி இயக்குநரிடம் விண்ணப்பித்துள்ளனர். அதை நிறைவேற்றித் தர அரசு விரைந்து ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அவ்வாறு ப்ரபோசல் உதவி இயக்குநரிடத்திலே கொடுத்திருந்தால் ஒரு மாத காலத்திற்குள் பதிவு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 280, திருமதி ஜீனத் சர்புதீன் மற்றும் திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

280—

உலமாக்களுக்கு ஒய்வூதியத்தை அதிகரித்தல்

***26010**—திருமதி ஜீனத் ஷெர்புதீன்*

திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—